விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதலாவது நாளிதழ்
Eelanadu

08.08.2020 சனிக்கிழமை

## 66 முன்னாள் எம்.பிக்கள் தோல்வி!

யாழ்ப்பாணம், ஓக. 08

நடைபெற்று முடிவடைந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 66 பேர் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்தனர் என்று தெரிய வந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கடந்தமுறை பாராளுமன்றத்துக்கு தெரிவான, மாவை சேனாதிராசா, த. சித்தார்த்தன், ஈ. சரவணபவன், சீ. யோகேஸ்வரன், ஞா. சிறீநேசன், சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறீஸ்கந்தராஜா, சிவமோகன் ஐக்கிய தேசியக் கட்சியில் தெரிவான திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் மயில்வாகனம் திலகராஜ், எஸ்.ஏ.முத்துக்குமரன் ஆகிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

02



# விக்னேஸ்வரன், கஜேந்திரகுமாருடன் இணைந்து செயற்பட விரும்புகிறோம்

### சுமந்திரன் பகிரங்க அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 08

பாராளுமன்றத்தில் விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் ஆகியோருடன் இணைந்து செயற்படவே நாம் விரும்புகிறோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

நேற்று தனது அலுவலகத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். அதிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியிருந்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,


**19 ஐ திருத்த முயற்சி**

இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுள்ளது. இது யாரும் எதிர்பார்க்காதது. அவர்கள் 19 ஆவது திருத்தம்,

02

# இனத்தின் நன்மைக்காக ஒன்றிணைய நான் தயார்

## தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு விக்கி நல்லெண்ண சமிக்ஞை



யாழ்ப்பாணம், ஓக. 08

**எமது இனத்தின் நன்மை கருதி தெரிவு செய்யப்பட்டுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே சிங்கள - பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்ட - ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மிகவும் அவசியம். இதற்கு நானும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் தயாராக இருக்கின்றோம்.**

**- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

02

## யாழ். மாவட்ட தேர்தல் முடிவுகளில் மோசடி

### சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஓக. 08

யாழ்ப்பாணத்தின் தேர்தல் முடிவுகளில் மோசடி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பணியில் இருந்த உயர் அதிகாரிகளுக்கு கடும் அழுத் தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

02

## பெரமுனவில் சுரேன் ராகவன்

கொழும்பு, ஓக. 08

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தனது தேசியப் பட்டியல் நியமனத்தில் வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவனுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இரு முஸ்லிம் இனத்தவர்களுக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது.

நடந்து

02

## தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கும் உரிமை கூட்டமைப்புக்கு இல்லை!

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சொல்கிறது



கொழும்பு, ஓக. 08

"புதிய பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் குரலாக ஒலிப்பதற்கு தார்மீக மற்றும் நித்திய உரிமை உள்ளது என்று இனி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தர்க்கம் செய்ய முடியாது" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின்

02

## விருப்பு வாக்கு விவகாரம் விளக்கம் கோருகிறார் சசிகலா



யாழ்ப்பாணம், ஓக. 08

தமது விருப்பு வாக்கு தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி

02

## அரசுடன் சேர்ந்து பயணிப்போம்!! நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த!

### வெற்றியின் பின்னர் சம்பந்தன் கருத்து



திருகோணமலை, ஓக. 08

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கத்துடன் சேர்ந்து பயணிக்கத் தயார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

நடந்து முடிந்த 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 10 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்ப வெற்றியடைந்தது. இதையொட்டி நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இரா.சம்பந்தன்

02

## தியாகி திலீபனின் நினைவு தூபியில் அஞ்சலித்து உறுதியேற்றது முன்னணி



யாழ்ப்பாணம், ஓக. 08

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியை தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலித்து உறுதியேற்று வெளிப்படுத்தினர் தமிழ்த் தேசிய

02

**உண்மைகள் நேர்மையானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## விக்னேஸ்வரன்....

சுயாதீன ஆணைக்குழுக்கள் சம்பந்தமாக ஜனாதிபதிக்கு கொண்டுவரப்பட்ட மட்டுப்படுத்தல்கள் சம்பந்தமாக பல விடயங்களை நாட்டுக்கு கூறியுள்ளனர். வரும் பாராளுமன்றத்தில் அவர்கள் சொன்னபடி நடவடிக்கை எடுப்பார்களா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**எதிர்பாராத பின்னடைவு**

வடக்கு, கிழக்கில் கூட்டமைப்பு பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. 20 ஆசனங்களை மக்களிடம் கேட்டோம். ஆனால், அதில் அரைவாசியே எமக்குக் கிடைத்துள்ளது. இது நாம் எதிர்பாராத பின்னடைவு.

2018 உள்ளூராட்சி தேர்தலிலும் பின்னடைவு ஏற்பட்டாலும் அந்த தேர்தல் முறை, சூழல் எனப் பல காரணங்கள் இருந்தன. ஆகையால் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையிலேயே நாம் தேர்தலை எதிர்கொண்டோம்.

**குறைகளை ஏற்கிறோம்**

இந்தத் தேர்தல் முடிவுகள் எங்களுக்கு பல கரிசனைகளை எழுப்புகின்றன. கூட்டமைப்பில் மக்களுக்கு நம்பிக்கை குறைந்திருக்கிறது என்பதை ஏற்கிறோம். நாம் பொறுப்புணர்வுடன் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப செயற்படுவோம். பின்னடைவுக்கான காரணங்களை கண்டறிந்து மீண்டும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையை பெறுவோம்.

**கடும் தேசியத்தின் பின்னாலும் மக்கள்**

எங்களுக்கு வாக்களிக்காத மக்கள் வழமைபோல இரண்டு பக்கமும் சென்றுள்ளனர் என்றால் அது சரியாகாது. கடும் தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் பக்கமாகவும் சில மக்கள் போயுள்ளனர். அவர்களை போலி தமிழ்த் தேசியவாதிகள் என்று நாம் வர்ணிப்பதுண்டு. ஆனால், அவர்களுக்கும் ஒவ்வொரு ஆசனம் கிடைத்துள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்கும் கட்சிகளின் திசையிலும் மக்கள் சென்றுள்ளனர்.

**தலைமையே தோல்விக்கு காரணம்**

அம்பாறையில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் எங்களுக்கு இரு ஆசனங்கள் குறைந்துள்ளன. வன்னியில் 3 ஆசனங்களாகக் குறைந்துள்ளோம். எல்லாவற்றையும் விட மோசமாக யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்களாகக் குறைந்துள்ளோம். எங்களுக்கு வெளியே இருக்கிற ஆசனங்களை விட நாம் குறைந்துள்ளோம். இந்தப் பின்னடைவு தொடர்பு நாம் கலந்துரையாடுவோம். கட்சித் தலைவர் தோற்றுள்ளார், மட்டக்களப்பில் பொதுச் செயலாளர் தோற்றுள்ளார். இது தமிழரசின் தோல்வி. அவர்களின் தோல்வி தீர்மானமானது. இது குறித்து கட்சி நடவடிக்கை அவசியம்.

**கட்சிக்குள் ஒற்றுமையில்லை**

இந்தப் பின்னடைவுகளுக்கு கட்சியும் கட்சியின் செயற்பாடுகளும் ஒரு காரணம். வெளியில் இருந்து வந்த அழுத்தங்களே இதற்குக் காரணம். கட்சிக்குள்ளே ஒற்றுமையின்மையும் - சிலரை தோற்கடிக்க வேண்டும் என்று பகிரங்கமாகவே கூறி செயற்பட்ட தருணங்களும் உள்ளன. என் மீது பொய்யான - அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

**தலைமை அசண்டை!**

என் மீதான குற்றச்சாட்டுக்கள் உட்கட்சிக்குள் ஒற்றுமையின்மை குறித்து நான் கட்சித் தலைமைக்கு பல தடவைகள் கூறியுள்ளேன். சிறிதரனும் இதுபற்றி கூறியுள்ளார். அவர் எழுத்திலும் ஆதாரங்களுடனும் கூட கட்சித் தலைவருக்கு பகிரங்கப்படுத்தினார். ஓர் அரசியல் கட்சி தேர்தலை சந்திக்கும்போது அந்தக் கட்சியின் வேட்பாளரக்ளுக்கு எதிராக செயற்படுவது பாரதூரமான தவறு. அவ்வாறானவர்களை நடவடிக்கையின்றி விட்டு வைப்பது அது பாரிய குற்றம். இந்த விடயங்களில் கட்சித் தலைமை அசண்டையாக இருந்தது. இதுவும் கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம்.

**விக்கி, கஜேந்திரகுமாருக்கு அழைப்பு**

பாராளுமன்றத்தில் நாம் 10 பேர்தான் கூட்டமைப்பினர் அமரப்போகிறோம். யாழ்ப்பாணத்தில் இருந்து விக்னேஸ்வரன், மற்றும் கஜேந்திரகுமார் அவருடன் வரும் இன்னொருவருமாக மூவர் பாராளுமன்றம் வருவர். அவர்கள் எங்களோடு இணைந்து அல்லது நாங்கள் அவர்களோடு இணைந்து செயற்பட விரும்புகிறோம் - என்றார்.

## தியாகி திலீபனின்....

மக்கள் முன்னணியினர்.

கடந்த 5 ஆம் திகதி நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் அடிப்படையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ். மாவட்டத்தில் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது. தேசியப் பட்டியல் மூலமாகவும் ஓர் ஆசனம் அந்த அணிக்குக் கிடைத்தது.

இந்த வெற்றியை தமிழினத்தின் விடுதலைக்காகவும் - தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் 12 நாட்கள் நீர் - உணவு இன்றி உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தியாகி திலீபனுக்கு சமர்ப்பித்தனர். அத்துடன், தமிழ் மக்களின் உரிமைக்காக அர்ப்பணிப்புடனும் - நேர்மையாகவும் - உறுதியுடனும் குரல் கொடுப்போம் என்று உறுதி பூண்டனர்.

தொடர்ந்து தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் சுடர் ஏற்றியும் - மலர் மாலை அணிவித்தும் - பூக்கள் தூவியும் அஞ்சலித்தனர்.

## தமிழ் மக்களின்....

தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

கடந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களை பெற்றிருந்தது. இந்த முறை 10 ஆசனங்களை மாத்திரமே அந்தக் கட்சி பெற்றுள்ளது. தமிழ் மக்கள் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மாத்திரம் நம்பிக்கை கொள்ளவில்லை.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி முதலான கட்சிகளுக்கும் தமிழ் மக்களின் நம்பிக்கை கிடைத்துள்ளது - என்றும் இதன்போது அவர் கூறினார்.

## விருப்பு வாக்கு....

அதிகாரியிடம் விளக்கம் கோரவுள்ளார் என்று இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் போட்டியிட்ட யாழ்பபாண மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

## அரசுடன்....

தலைமையில் விசேட பூசை, வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன் பின்னர் அவரின் வீட்டில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியவை வருமாறு,

“இம்முறை இடம்பெற்ற தேர்தலை ஒரு ஜனநாயக தேர்தலாக நான் கருதவில்லை. மக்களுக்குப் பணம் வழங்கி நன்கொடை கொடுத்து மதுபானம் வழங்கி ஆளும் கட்சியினர் ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். சிறிய சிறிய தமிழ் கட்சிகள் போட்டியிட்டு தமிழ் வாக்குகளைப் பிரித்துள்ளனர்.

இதனால், 20 ஆசனங்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட்டமைப்பிற்கு 9 ஆசனங்களே (தேசியப் பட்டியல் தவிர்த்து) கிடைத்துள்ளது. இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி.

மேலும், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நீதியும் மற்றும் கௌரவமான பிரஜையாக வாழ தீர்வு வழங்கப்பட வேண்டும். அதில் நாம் உறுதியாக உள்ளோம். ஆனால், ஆட்சி அமைக்கும் அரசாங்கத்தின் நிலைபாட்டைக் கொண்டு எமது இலட்சியத்தை அடைவோம்” என்றார்.

## இனத்தின்....

நேற்று யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் நடத்திய ஊடக சந்திப்பில் விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் ஆகியோர் பாராளுமன்றத்தில் இணைந்து செயற்பட விரும்புகிறோம் என்று கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்த முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

தேர்தல் பிரசாரத்தின்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது நான் முன்வைத்த அதே குற்றச்சாட்டை நான் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது. நீங்கள் கடந்த காலத்தில் உரிமை அரசியலை தவிர்த்து சலுகை அரசியலை முதன்மைப்படுத்தி மேற்கொண்ட செயற்பாடுகளே இம்முறை தேர்தலில் கணிசமானளவு மக்கள் சிங்கள கட்சிகளுக்கும் அரசாங்க சார்பு தமிழ் கட்சிகளுக்கும் வாக்களிக்கும் நிலைமையை உருவாக்கியிருக்கின்றது. இதே தவறை மீண்டும் செய்து எமது 70 வருட கால போராட்டத்துக்கு சாவு மணி அடித்துவிடாதீர்கள்.

வடக்கு- கிழக்கு ரீதியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெரும் தோல்வியை சந்தித்துள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரனினால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு அழிக்கப்படக்கூடாது என்றும் தவறானவர்களை நீக்கி சரியானவர்களை தெரிவு செய்து கூட்டமைப்பு சரி செய்யப்படவேண்டும் என்றும் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் இன்று சரியானவர்கள் வெளியேற்றப்பட்டு தவறானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு பாரதூரமான நிலைமையினை உருவாக்கி இருக்கின்றது. தேர்தல் முடிவடைந்த பின்னர், ஆசனங்களுக்காக இடம்பெற்றுள்ள சில அசிங்கமான செயற்பாடுகள் கூட்டமைப்பின் எதிர்காலப் பாதையை கட்டியம் கூறி நிற்கின்றன.

எது எவ்வாறாக இருந்தபோதிலும், தெரிவுசெய்யப்பட்டுள்ள எல்லா தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், இந்த நாட்டில் எமது மக்களின் இருப்பு, அடையாளம் ஆகியவற்றை அழிவில் இருந்து மீட்கும் வகையில் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயற்படவேண்டிய ஒரு ஆபத்தான சூழ்நிலையில் இருக்கின்றோம். முன்னெப்போதும் இல்லாத வகையில், சிங்கள பௌத்த பேரினவாதம் பாராளுமன்றத்துக்குள் அசுர பலத்துடன் புகுந்துள்ளது. பெருமளவில் எமது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படும் ஆபத்தும் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான இனப்படுகொலைகளும் தீவிரப்படுத்தப்படும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளன. இந்த அச்சுறுத்தலை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்று சேர்ந்து முறியடிக்கவேண்டும். எமக்கு இடையேயான பொது உபாயங்கள் - ஒன்றுபட்ட செயற்பாடுகள் அவசியம்.

எமது மக்கள் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும். பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் எழுச்சியும் திரட்சியும், நாம் அவர்களுக்கு அஞ்சி ஒடுங்கி எமது சுய நிர்ணய உரிமைகளைப் பேசக் கூடாது என்றோ விட்டுக்கொடுக்க வேண்டும் என்றோ ஆகிவிடக் கூடாது. சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணைகளை நாம் வலியுறுத்தமுடியாது என்று ஆகிவிடக் கூடாது. நில ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகவோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகவோ நாம் போராட முடியாது என்று ஆகிவிடக்கூடாது. வடக்கு - கிழக்கு இணைப்பை நாம் வலியுறுத்தக் கூடாது என்று கூட ஆகிவிடக் கூடாது - என்றுள்ளது.

## 66 முன்னாள்....

இதில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அனைத்து முன்னாள் எம்.பிக்களும் தோல்வியடைந்தனர். முக்கியமாக, ரணில் விக்ரமசிங்க, ரவி கருணாநாயக்க, திலங்க சுமதிபால, தயா கமகே, சுஜீவ சேனசிங்க, அர்ஜூன ரணதுங்க, பாலித தெவரபெரும, அஜித்.பி.பெரேரா, ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பெரமுனவில்....

முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தேசியப் பட்டியல் மூலமாக 17 ஆசனங்கள் கிடைத்தன.

இந்த இடங்களுக்கு யாரை நியமிப்பது என்ற பெயர் பட்டியலை அந்தக் கட்சி நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வழங்கியது.

அதில், வடக்கின் முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுடன் மொஹமட் உவைஸ் மொஹமட் அல் ஷப்ரி, மொஹமட் பலீல் மரியன் அஷ்மி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கெவிந்து குமாரதுங்க, அஜித் நிவாட் கப்ரால், சாகர காரியவசம், ஜயந்த வீரசிங்க, திருமதி மஞ்சுள திஸநாயக்க, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, பேராசிரியர் சரிதா ஹேரத், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, யதாமினி குணவர்த்தன, திரான் அலெஸ், கலாநிதி சீதா அரம்பேபொல, ஜயந்த கெடகொட ஆகியோரும் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

## யாழ். மாவட்ட....

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பை நடத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த தேர்தலில் பல இலட்சம் வாக்காளர்களை கொண்ட மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள்கூட விரைவாக வெளியாகின. ஆனால், 4 இலட்சத்திற்கும் குறைவான வாக்குகள் பதிவான யாழ்ப்பாணத்தில் தாமதமாகவே அறிவிக்கப்பட்டது.

விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டபின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட சிறிதரன், சித்தார்தன், சசிகலா போன்றவர்கள் முன்னணியில் இருந்தார்கள். இதன் பின்னர் சசிகலா ரவிராஜ் பதவி விலக வேண்டும், அல்லது ராஜினாமா செய்ய வேண்டும் என்று அந்த கட்சியினரே அழுத்தம் கொடுத்தார்கள்.

இதனை ஏற்றுக் கொள்ளாத சசிகலா வாக்கெண்ணும் நிலையத்தில் நின்றே தனது கைத்தொலைபேசியை எறிந்ததை தொடர்ந்து அங்கு பிரச்னைகள் எழுந்தன. இரவு 10 மணியளவில் வெளியிடக்கூடிய நிலையில் இருந்த தேர்தல் முடிவுகள் வேண்டுமென்றே தாமதிக்கப்பட்டு 3.30 மணியளவிலேயே அறிவிக்கப்பட்டன.

தெரிவத்தாட்சி அலுவலரை நாம் சந்தித்து, ஜனநாயகத்திற்கு எதிரான தவறான முடிவு எடுப்பதை நாங்கள் விரும்பவில்லை. மக்களின் தீர்ப்பு தேர்தல் முடிவுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று கோரினோம். அதற்கு எந்த பதிலோ அல்லது முடிவை வெளியிடும் நோக்கம் அவர்களிடம் இல்லை.

சுமந்திரனின் உதவியாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள் கைகாட்டி மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. சசிகலாவின் புதல்வி, மருமகள் உட்பட குடும்பத்தினர் தாக்கப்பட்டார்கள். சுமந்திரன் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளின் உதவியோடு, விசேட அதிரடி படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு வன்முறையை பயன்படுத்தி சுமந்திரனை மீட்டு செல்லும் அளவிற்கு அரச மற்றும் படை பலம் பயன்படுத்தப்பட்டது. இவை அப்பட்டமான ஜனநாய மீறல் இவற்றுக்கு எதிராக சகலரும் கட்சி பேதங்களை மறந்து எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.

Eelanadu ஈழநாடு
08.08.2020 சனிக்கிழமை
சார்வரி, ஆடி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# தேர்தல் முடிவுகள் தரும் படிப்பினைகள்?

கூட்டமைப்பின் ஏகபோகத்தில் உடைவு ஏற்படுமென்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், எதிர்பாராத சில விடயங்களும் இடம்பெற்றிருக்கின்றன. எதிர்பார்ப்பிற்கு வெளியில் இடம்பெற்றிருக்கும் சில முடிவுகள், தமிழ்த் தேசியக் கட்சிகளின் படிப்பினைகளுக்குரியவை. இவற்றிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியது கட்சித் தலைமைகளின் கடமை. ஒருவேளை கட்சித் தலைமைகள் பாடங்களை கற்றுக்கொள்ளத் தவறினால் மக்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எப்படியிருந்தாலும் மக்கள் எங்களுக்குத்தான் வாக்களிப்பார்களென்னும் கூட்டமைப்பின் எண்ணம் படுதோல்வியடைந்திருக்கின்றது. யாழ்ப்பாண தேர்தல் முடிவுகள் ஓரளவு எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும் கூட, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்ட ஒருவர் யாழ்ப்பாணத்தில் அதிக விருப்பு வாக்குகளை பெற்று வெற்றிபெறுவாரென்பது எவருமே எதிர்பார்த்திராத ஒரு முடிவாகும்.

இந்த முடிவு தமிழ்த் தேசிய தரப்பிரனருக்கான ஓர் அபாய எச்சரிக்கையாகவும் இருக்கின்றது. விடயங்களை மிகவும் இலகுவாக எடுத்துக் கொண்டால் அது தவறாகும். மக்கள் சலுகைகளுக்கு பின்னால் போகின்றனர். குறிப்பாக இளைஞர்கள் ஆசை வார்த்தைகளுக்கு எடுப்பட்டுப் போகின்றனர். சலுகைகளுக்கு மயங்கிவிட்டனர். விடயங்களை இவ்வாறு மேலோட்டமாகப் பார்க்க முடியாது. உண்மையில் இளைய தலைமுறையினரைக் கையாளக் கூடிய எந்தவொரு வேலைத்திட்டமோ அல்லது அவர்களது பிரச்னைகளை விளங்கிக்கொள்ளக் கூடிய பொறிமுறையோ பிரதான தமிழ் கட்சிகளிடம் இல்லை. இதன் காரணமாகவே தமிழ் இளைய தலைமுறையினர் கொழும்புக் கட்சிகளை நோக்கிச் செல்கின்றனர். இதனை சரியாக கையாள முடியாது போகுமானால் எதிர்காலத்தில் நிலைமை இதனையும்விட மோசமாகும்.

முள்ளிவாய்க்கால், மாவீரர், தேசியம், உரிமை, போர்க் குற்றங்கள், இனப்படுகொலை - இப்படியான சொற்களை அடிக்கடி உச்சரிப்பதன் ஊடாக மட்டுமே, எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலை பாதுகாக்க முடிமென்பது ஒரு கற்பனையாகவே இருக்க முடியும். ஏற்கனவே ஈழநாடு, கிழக்கின் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசிய விலகலை வெளிப்படுத்தக் கூடுமென்று எச்சரித்திருந்தது. எமது எச்சரிக்கைக்கு அமைவாகவே முடிவுகள் அமைந்திருக்கின்றன. கூட்டமைப்பு அம்பாறையின் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழந்திருக்கின்றது. அதேவேளை தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட பிரதான மாற்றுத் தரப்புக்களான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றால், யாழ். தேர்தல் மாவட்டத்திற்கு வெளியில் மக்களின் ஆதரவை நிரூபிக்க முடியவில்லை.

ஒப்பீட்டடிப்படையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்னைய தேர்தல்களோடு ஒப்பிட்டால் மக்கள் ஆதரவைப் பெறுவதில் முன்னேறியிருக்கின்றது. அனால் இந்த வெற்றிக்கு பின்னால் 10 வருடகால உழைப்பிருக்கின்றது. ஒரு சரியான விடத்திற்காக மக்களின் ஆதரவை பெறுவதற்கு ஏன் இத்தனை ஆண்டுகள் சென்றது? இதற்கும் அந்தக் கட்சியினர் பதிலை தேடவேண்டும்.

விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினரால் குறிப்பிடத்தகுந்த வெற்றியை பதிவுசெய்ய முடியவில்லை. விக்னேஸ்வரன் தரப்பின் தோல்வியும் ஒரு விடயத்தை உறுதி செய்திருக்கின்றது. அதாவது, ஒரு பெரிய அணியாக காண்பிப்பது மட்டும் தேர்தல் வெற்றிக்கு போதுமானதல்ல. சின்னம், கட்சிகளின் எண்ணிக்கை என்பதற்கு அப்பால் மக்கள் மத்தியில் ஒரு தரப்பினருக்கு எந்தளவு அறிமுகம் இருக்கின்றது, மக்கள் எந்தளவு தூரம் குறித்த தரப்பை நம்புகின்றனர் போன்ற விடயங்களும் தேர்தல் வெற்றிக்கு மிகவும் முக்கியமானது. இவற்றை விளங்கிக்கொண்டு நிலைமைகளை திறம்படக் கையாள்வதன் மூலம், விலகிச்சென்ற மக்களை மீளவும் தாய்வீடு நோக்கி வரவைக்க முடியும். ஆனால், வறட்டுத்தனமான கொள்கைகளாலும் அசட்டுத் துணிவினாலும் விடயங்கள் நோக்கப்படுமாக இருந்தால், எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய வாக்குவங்கியை தக்கவைப்பது மிகவும் கடினமாகலாம். தமிழ்த் தேசிய வாக்கு வங்கியை சிதறவிட்டால், அதன் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாக்க முடியாது.

# இரத்தினபுரிக்கு தேசியப்பட்டியல்!

## முற்போக்குக் கூட்டணியிடம் கோரிக்கை

*கொழும்பு, ஓக. 08*

*ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு 6 ஆசனங்கள் கிடைத்துள்ள பின்னணியில், அந்த கட்சிக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல் உறுப்புரிமையை இரத்தினபுரிக்கு வழங்க தலைமைத்துவம் இந்த முறையேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட தமிழ் அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் கோரிக்கை விடுக்கின்றார்.*

*தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சந்திரகுமாருக்கு அந்த தேசியப் பட்டியல் உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.*

*பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், இரத்தினபுரி மாவட்டத்திற்கான தமிழ் பிரதிநிதித்துவம் மற்றுமொரு முறை இல்லாது போயுள்ள பின்னணியிலேயே அவர் இந்த கோரிக்கை விடுத்துள்ளார்.*

*ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இரத்தினபுரியில் போட்டியிட்ட சந்திரகுமார் கணிசமான அளவு வாக்குகளை பெற்றுக்கொண்டுள்ளமையினால், தேசிய பட்டியல் உறுப்புரிமையை அவருக்கு வழங்க தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.*

*கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் சந்திரகுமார் கணிசமான அளவு வாக்குகளை பெற்றுக்கொண்ட போதிலும், இரத்தினபுரிக்கு கிடைக்கவிருந்த தேசிய பட்டியல் உறுப்புரிமை கடந்த முறையும் இல்லாது போயிருந்ததை எஸ்.ஆனந்தகுமார் இதன்போது நினைவூட்டினார்.*

*தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் தேசிய பட்டியலுக்கு ஒருவர் ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள போதிலும், நுவரெலியா மாவட்டத்திற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் தேர்தலின் ஊடாக 3 பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*அதனால், நுவரெலியா மாவட்டத்திற்கு மற்றுமொரு பாராளுமன்ற உறுப்புரிமை அவசியமற்றது என கூறியுள்ள எஸ்.ஆனந்தகுமார், அந்த பாராளுமன்ற உறுப்புரிமையை சந்திரகுமாருக்கு வழங்க கட்சி தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.*

*இரத்தினபுரிக்கு தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதற்காகவே தான் போராடுவதாகவும், அந்த சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.*

*இந்த சந்தர்ப்பத்திலாவது இரத்தினபுரி தமிழர்களின் நாடி துடிப்பை அறிந்து ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தை வழங்கும் பொறுப்பு தமிழ் முற்போக்கு கூட்டணி வசம் உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட தமிழ் அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவிக்கின்றார்.*

# புதிய மலையகம் உருவாகும்

## ஜீவன் தொண்டமான் கூறுகிறார்



*கொழும்பு, ஓக. 08*

*புதிய மலையகத்தை உருவாக்குவேன் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே மக்கள் தனக்கு பேராதரவை வழங்கியுள்ளார் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.*

*எனவே, மக்களின் எதிர்ப்பார்ப்பை நிச்சயம் நிறைவேற்றுவதாகவும் தனக்குக் கிடைத்த வெற்றியை மக்களுக்காக சமர்ப்பிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*கொட்டகலையில் நேற்று வெள்ளிக் கிழமை ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*


*நுவரெலியா மாவட்டத்தையும் கைப்பற்றி வெற்றி பெறவேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாக இருந்தது. தந்தையும் இதனையே கூறியிருந்தார். அந்தவகையில் மாவட்டத்தைப் கைப்பற்றி விருப்பு வாக்கு பட்டியலில் முதலிடம் பிடித்தது மகிழ்ச்சியளிக்கின்றது.*

*இந்தப் பெரும் வெற்றியை கண்டு மகிழ்வதற்கு எனது தந்தை அருகில் இல்லாமை பெரும் கவலையளிக்கின்றது. ஆனால் எனது தந்தையை நேசித்த மக்கள் என்னுடன் இருக்கின்றார்கள். அது போதும்.*

*தேர்தல் காலங்களில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சிறுபையன் என்றுகூட என்னை தாக்கிப் பேசியிருந்தனர். ஆனால், என் மீது நம்பிக்கை வைத்து இளைஞர்களும், மக்களும் பேராதரவை வழங்கியுள்ளனர்.*

*புதியதொரு மலையகத்தை உருவாக்க முடியும் என மக்கள் நம்பியுள்ளனர். அந்த நம்பிக்கையை நிச்சயம் நிறைவேற்றுவேன். எனது வெற்றியை மக்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். சொல்லில் அல்லாமல் எனது சேவைகளை செயலில் காட்டுவதற்கே விரும்புகின்றேன்-என்றார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்



# பொலனறுவையில் மைத்திரி அதிரடி!

## ஒரு லட்சம் வாக்குகளை கடந்தார்

கொழும்பு, ஓக. 08

பொலனறுவை மாவட்டத்தில் நான்கு ஆசனங்களைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி வெற்றிநடை போட்டுள்ளது.

மாவட்ட விருப்பு வாக்குப் பட்டியலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 137 வாக்குகளைப் பெற்று முதலிடம் பிடித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுடன் அரசியல் போரில் ஈடுபட்ட ரொஷான் ரணசிங்க 90 ஆயிரத்து 615 வாக்குகளைப்பெற்று இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு வேட்புமனு வழங்கப்படக்கூடாது என ஆரம்பம் முதலே வலியுறுத்திவந்த ரொஷான் ரணசிங்க, மைத்திரியின் கடந்தகால அரசியல் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்தார்.

எனினும், மைத்திரிக்கு மொட்டுக் கட்சியில் வாய்ப்பு வழங்கப்பட்டது. மறுபுறத்தில் ரொஷான் ரணிங்கவை சமரசப்படுத்தவதற்காக மாவட்டத்தின் தலைமை வேட்பாளர் பதவி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து தேர்தல் பரப்புரைகளின்போது இருவரும் கடும் சொற்சமரில் ஈடுபட்டனர். சரமாரியாக விமர்சனக் கணைகளையும் தொடுத்துக்கொண்டனர். 'முட்டை அப்பம், 'கழுகு கதை' உட்பட மேலும் சில அறிவிப்புகளால் பொலனறுவை அரசியல் களம் அனல் கக்கியது.

இதில் குறிப்பாக மைத்திரி கூறிய கழுகுக் கதை அவருக்கே பெரும் தலையிடியை ஏற்படுத்தியது. திரும்பும் திசைகளியெல்லாம் மொட்டுக்கட்சி காரர்கள் அவரை விளாசித்தள்ளினர்.

"நீண்டநேரம் காத்திருந்து நீர்க்காகம் மீனை கொத்தினாலும், மேலே இருந்து தக்க தருணம் பார்த்து பறந்துவந்து கழுகு அதனை பறித்துசெல்லும். இம்முறை எனது தாக்குதல் வியூகமும் அவ்வாறே அமையும்."-என்பதே மைத்திரி கூறிய கதையின் சாராம்சம்.

அதாவது ரொஷான் ரணசிங்க, மாவட்ட தலைவராக இருந்தாலும் மைத்திரிதான் தலை என்பதையே இக்கதை மூலம் அவர் கூற முயற்சித்தார். ஆனால், இக்கதைக்கு கை, கால், மூக்கு, பொட்டு எல்லாம் வைத்து மொட்டுக் கட்சிக்காரர்கள் ஊதி பெருப்பித்து, மைத்திரிக்கு நெருக்கடி கொடுத்தனர். அவருக்கு வாக்களிக்ககூடாது எனவும் வலியுறுத்தினர்.

கடும் சவால்கள், தாக்குதல்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவர் மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

# லட்சத்தை தொட்டார் ஜீவன்



கொழும்பு, ஓக. 08

நுவரெலியா மாவட்டத்திலிருந்து இம்முறை 5 தமிழ்வேட்பாளர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர். நுவரெலியா மாவட்டத் தில் 5 ஆசனங்களை பொதுஜன பெரமுன கைப்பற்றியுள்ளதுடன், ஐக்கிய மக்கள் சக்தி 3 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. அந்தவகையில் பொதுஜன பெரமுன கட்சியில் விருப்பு வாக்குகளை பெற்று வெற்றி பெற்றவர்கள்.

ஜீவன் தொண்டமான் - 109,155
சி.பி.ரட்நாயக்க - 70,871
எஸ்.பி.திஸாநாயக்க - 66,045
மருதபாண்டி ரமேஸ்வரன் - 57,902
நிமல் பியதிஸ - 51,225

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் விருப்பு வாக்குகளை பெற்று வெற்றி பெற்றவர்கள்: -

பழனி திகாம்பரம் - 83,392
வேலுசாமி இராதாகிருஸ்ணன் - 72,167
மயில்வாகனம் உதயகுமார் - 68,119

அதேவேளை, 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவமே கிடைக்கப் பெற்றிருந்தது.

# பதுளையில் செந்தில் தோல்வி!

கொழும்பு, ஓக. 08

நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் நிமால் சிறிபால டி சில்வா 141,901 அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ள நிலையில், இ.தொ.காவின் செந்தில் தொண்டமான் தோல்வியடைந்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பதுளை மாவட்டத்தில் 6 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அந்தக் கட்சியின் சார்பில் சுதர்சன தெனிபிட்டிய 71,766 வாக்குகளையும், தேனுக விதானகமகே 68,338 வாக்குகளையும், சாமர சம்பத் தசநாயக்க 66,393 வாக்குகளையும், டிலான் பெரேரா 53,081 வாக்குகளையும் ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி 50,151 விருப்பு வாக்குகளையும் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி பதுளை மாவட்டத்தில் மூன்று ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அதில் வடிவேல் சுரேஸ் 49,762 வாக்குகளையும், அரவிந்தகுமார் 45,491 வாக்குகளையும் சமிந்த விஜேசிறி 36,291 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

# புதிய பாராளுமன்றத்துடன் இணைந்து செயற்பட தயார்

## அமெரிக்கா அறிவிப்பு



அரசு மற்றும் புதிய பாராளுமன்றத்துடன் இணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று தொடர்பான சவால்கள் காணப்படுகின்ற போதிலும், அமைதியுடனும் உரிய நடைமுறைகளுடனும் தேர்தலை நடத்தியதை முன்னிட்டு இலங்கைக்குப் பாராட்டு தெரிவிப்பதாக அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

புதிய பாராளுமன்றம் கூட்டப்படுவதன் மூலம், பொருளாதாரத்தை கட்டியெழுப்பி மனித உரிமைகள் மற்றும் நாட்டில் சட்டவாட்சியை அரசு உறுதிப்படுத்தும் எனத் தாம் நம்புவதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான உறுதிப்பாடும் அவற்றில் உள்ளடங்கும் எனக் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தனது அறிக்கையில் மேலும் கூறியுள்ளது.

# கொழும்பில் மொட்டு ஆதிக்கம்!

கொழும்பு, ஓக. 08

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையான கொழும்பு மாவட்டமும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வசமாகியது. அந்தக் கட்சி 6 இலட்சத்து 74 ஆயிரத்து 603 வாக்குகளுடன் 12 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 3 இலட்சத்து 87 ஆயிரத்து 145 வாக்குகளுடன் 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 67 ஆயிரத்து 600 வாக்குகளுடன் ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெறும் 30 ஆயிரத்து 875 வாக்குகளே பெற்றுள்ளது. ஆசனம் எதையும் பெறவில்லை.

# தூக்குத் தண்டனை வேட்பாளரும் வெற்றி!



மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அரசியல்வாதி, விருப்பு வாக்கு பட்டியலில் இரண்டாம் இடம்பிடித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூன்று அரசியல்வாதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் குற்றவாளிகளுக்கு கடந்த 31 ஆம் திகதி மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கஹவத்தை பகுதியில் 2015 ஆம் ஆண்டு தேர்தல் பேரணி இடம்பெற்ற போது, ஒருவரைச் சுட்டுக் கொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் பிரதிவாதிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுத்தேர்தலுக்கு 5 நாட்கள் எஞ்சியிருந்த நிலையிலேயே கடந்த 31 ஆம் திகதி வேட்பாளர் பிரேமலால் ஜயசேகர மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவரின் சார்பில் அவரின் மகள் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டார்.

இந்நிலையில் வெளியாகியுள்ள விருப்பு வாக்கு பட்டியலில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 237 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

# ஹிருணிகா, சுஜீவ, பௌசி படுதோல்வி





கொழும்பு, ஓக. 08

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிருணிகா பிரேமச்சந்திர, சுஜீவ சேனசிங்க, ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.

அத்துடன், தமிழ் வேட்பாளர்களான வி.ஜனகன், சி.வை.பி. ராம் ஆகியோரும் நாடாளுமன்றம் தெரிவாக வில்லை.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவும் தோல்வியடைந்துள்ளார்.

# இரத்தினபுரியில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இம்முறையும் இல்லை

கொழும்பு, ஓக. 08

பொதுத்தேர்தலில் எட்டு ஆசனங்களைக் கைப்பற்றி இரத்தினபுரி மாவட்டத்தையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்திக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்துள்ளன.

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது இன்னும் எட்டாக் கனியாகவே இருக்கின்றது. இம்முறையும் அந்த இலக்கை அடைய முடியாமல் போனது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியில் சந்திரகுமாரும், ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ஆனந்தகுமாரும் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் விருப்பத்தை அறிந்து கூட்டமைப்பு முடிவு எடுக்கவேண்டும்

## கோவிந்தன் கருணாகரம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஓக. 08

தமிழ் மக்களின் விருப்பங்களை அறிந்து அதற்கேற்றாற்போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவுகளை எடுக்கவேண்டிய தேவையுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எனக்கும் வாக்களித்த மக்களுக்கும் எனது வெற்றிக்கு தோள்கொடுத்த அனைவருக்கும் இந்த வேளையில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது வெற்றிவாய்ப்பைப் பறிப்பதற்காக பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. நான் நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடாது என்பதில் கட்சிக்கு வெளியே இருந்த எதிர்ப்பை விட கட்சிக்குள் அதிகளவிலான எதிர்ப்பு இருந்தது. மிகவும் போராடியே இந்த வெற்றியை நாங்கள் பெற்றிருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வித்தியாசமான பாதையை விரும்புகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது சென்றுகொண்டிருக்கின்ற பாதையில் ஒரு மாற்றம்வேண்டும் என்பதை மக்கள் விரும்புகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவக் கட்சியாக தமிழீழ விடுதலை இயக்கம் இருந்துவருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்று வரை இருக்கும் ஒரேயொரு கட்சியாக தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ இருந்து வருகின்றது.

வடக்கு-கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டியல் உட்பட கிடைத்த பத்து ஆசனங்களில் மூன்று தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை ரெலோ கொண்டுள்ளது.

விரைவில் எமது தலைமைக் குழு கூடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பாகவும் எமது நடவடிக்கைகள் குறித்தும் மக்கள் அதிகளவானோர் அபிவிருத்தியை விரும்பு வதன் காரணமாக அது தொடர்பிலும் கூடி ஆராய்ந்து தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவை அவசரமாக நாடாளுமன்றம்



கூடுவதற்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுவை கூட்டி அது தொடர்பில் ஆராயவேண்டும்.

தமிழ் மக்களின் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வை வேண்டி நிற்கும்வேளையில் வித்தியசமான முறையில் தமிழ் மக்கள் சிந்திக்கின்றனர்.

அந்தவகையில் தமிழ் மக்களின் விருப்பங்களை அறிந்து அதற்கேற்றாற்போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவுகளை எடுக்கவேண்டிய தேவையுள்ளது.அந்தவகையில் தமிழீழ விடுதலை இயக்கம் கூடி ஒரு தீர்மானத்தை எடுத்து அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சமர்ப்பித்து அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது- என்றார்.

# பிள்ளையான் முதலிடம்

மட்டக்களப்பு, ஓக. 08

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் 54 ஆயிரத்து 198 விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவான இரா.சாணக்கியன் 33 ஆயிரத்து 332 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார்.

கூட்டமைப்பின் சார்பில் தெரிவான மற்றைய உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் 26 ஆயிரத்து 382 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் தெரிவான ச.வியாழேந்திரன் 22 ஆயிரத்து 218 வாக்குகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தெரிவான நஸீர் அஹமட் 17 ஆயிரத்து 599 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

# புதிய அமைச்சரவை மட்டுப்படுத்தப்படும்

கொழும்பு, ஓக. 08

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இலங்கை பொதுஜன பெரமுன வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் அமையவுள்ள புதிய அமைச்சரவை 25 முதல் 28 ஆக குறைக்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

19 ஆவது திருத்த சட்டத்துக்கு ஏற்ப 30 அமைச்சர்களுக்கு மேல் அனுமதி இல்லை என்பதால் மஹிந்தவும் கோட்டாபயவும் புதிய அமைச்சரவையை 25 முதல் 28 வரை மட்டுப்படுத்தும் முடிவுக்கு வந்துள்ளனர் என பொதுஜன பெரமுனவின் மூத்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டால் ஒரு அமைச்சருக்கு கீழ் பல அமைச்சுப் பதவிகள் வழங்க வாய்ப்புள்ளது.

அந்தவகையில் பிரதமர் மஹிந்த பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சையும் எடுத்துக் கொள்ள வாய்ப்புள்ளது என அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், ஜனாதிபதி, பிரதமர் மஹிந்த மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து எதிர்வரும் நாட்களில் அமைச்சர்கள் குறித்து இறுதி முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பொதுக்கூட்டங்கள், பேரணி ஒரு வார காலத்துக்குத் தடை

கொழும்பு, ஓக. 08

நாடாளுமன்றத் தேர்தலின் இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு வார காலத்துக்கு பொதுக் கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் சட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 69 மற்றும் 70 பிரிவுகளின் படி, நாடாளுமன்றத் தேர்தலின் இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஒரு வாரம் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என்று பொலிஸ் சட்டப் பிரிவுப் பணிப்பாளர் எஸ்.எஸ்.பி. ருவான் குணசேகர தெரிவித்தார்.

தேர்தலுக்குப் பின்னர் அமைதியை நிலைநாட்ட இது போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். தேர்தலுக்கு பிந்தைய காலத்தில் அமைதியை நிலைநாட்ட பொறுப்பை அனைவரும் கைக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

# நடந்த தவறுகளை மதிப்பிடவேண்டும்

## ஜே.வி.பி. கூறுகிறது

கொழும்பு, ஓக. 08

நிறைவடைந்துள்ள பொதுத்தேர்தலில் அதிக வாக்குகளை பெற்றுக்கொள்ளமுடியாமல் போனமைக்கான தவறு குறித்து மதிப்பீடு செய்யவேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நிறைவடைந்துள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தவறு என்ன என்பதை நாங்கள் மதிப்பீடு செய்யவேண்டும்.

மேலும் ஊழல் அரசியல்வாதிகளின் பல தவறான செயல்களை நாங்கள் அம்பலப்படுத்திய பிறகும் மக்கள் எங்களுக்கு ஆதரவு வழங்கவில்லை என்றால் எம்மால் எதனையும் செய்ய முடியாது- என்றார்.

தேசிய மக்கள் சக்தி இம்முறை தேர்தலில் 3 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இந்தக் கட்சி, மொத்தமாக நான்கு இலட்சத்து 45 ஆயிரத்து 958 வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் இது மொத்த வாக்குகளில் 3.84 வீதமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையர்களை ஏமாற்றமாட்டோம்

## பிரதமர் மஹிந்த உறுதி

கொழும்பு, ஓக. 08

எனது ஆட்சிக்காலத்தில் அனைத்து இலங்கையர்களும் ஏமாற்றமடையாத நிலையை உறுதி செய்வேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றியடைவதற்கு ஆதரவு வழங்கிய அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவித்த பிரதமர் இவ்வாறு மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - எங்களது ஆட்சி காலத்தில் இலங்கை ஒருபோதும் ஏமாற்றமடையாது.

ஜனாதிபதி மீதும் என் மீதும் முழுமையான நம்பிக்கை வைத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் தங்களது ஆணையை வழங்கியுள்ளனர். அதற்கு மிகுந்த நன்றியை தெரிவித்துகொள்கின்றேன்.

மேலும் எமது தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மிகப் பெரும் ஆதரவை மக்கள் வழங்கியுள்ளனர்-என்றார்.

# மாலைதீவு ஜனாதிபதி மஹிந்தவுக்கு வாழ்த்து



Mahinda Rajapaksa
@PresRajapaksa
Thank you Maldives President @ibusolih and Vice President @FaisalNasym for your calls and warm wishes. Look forward to working with you closely on matters of mutual interest to both Sri Lanka and Maldives.
9:43 PM · Aug 6, 2020

கொழும்பு, ஓக. 08

பொதுத்தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மாலைதீவு ஜனாதிபதி இப்ரஹிம் மொஹமட் சோலி மற்றும் மாலைதீவின் துணை ஜனாதிபதிர் பைசல் நசீம் ஆகியோர் ருவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அவர்களுக்கு நன்றி தெரிவித்து பிரதமர் மஹிந்தவும் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் "உங்கள் அழைப்புகள் மற்றும் அன்பான வாழ்த்துக்களுக்காக நன்றி. இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இரு நாடுகளுக்கும் பரஸ்பர ஆர்வமுள்ள விடயங்களில் உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம்" எனப் பதிவிட்டுள்ளார்.

# நகர மேயர் உட்பட ஐவருக்கு பிடியாணை

கொழும்பு, ஓக. 08

குருநாகல் நகர முதல்வர் உட்பட 5 பேரைக் கைது செய்யுமாறு குருநாகல் நீதிவான் நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்ட மா அதிபரின் கோரிக்கைக்கு அமையவே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் இரண்டாம் புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்டமை தொடர்பிலேயே இவர்களை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

செய்திகள்

# தேசியப்பட்டியல் ஆசனத்தை வன்னிக்கு வழங்கவேண்டும்

## முன்னணியிடம் கோரிக்கை




வவுனியா, ஒக. 08

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டியல் ஆசனத்தை வன்னி மாவட்டத்திலே போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற வைத்தியர் திலகநாதனுக்கு வழங்குமாறு செட்டிகுளம் கால்நடை ஒன்றியத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார் .


இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

கால்நடை வைத்தியரான செல்லத்தம்பி திலகநாதனை இம்முறை தேர்தலில் வன்னி மாவட்டத்தில் களம் இறக்கியிருந்தோம். அவர் 7,200 விருப்பு வாக்குகளை பெற்று முன்னணியில் உள்ளார். அந்தவகையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்று கிடைத்துள்ளது. அந்த ஆசனத்தை வன்னிப்பகுதிக்கு ஒதுக்கி, விருப்பு வாக்குகள் அதிகம் பெற்ற வைத்தியர் திலகநாதனுக்கு வழங்க வேண்டும். அவர் வன்னியில் கால்நடை தொடர்பான விடயங்களில் பல்வேறு சேவைகளை முன்னெடுத்துள்ளார்.

அந்தவகையில் அவருக்கு நாம் எமது ஆதரவை வழங்கி அதிகமான வாக்குகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். எனவே அந்த ஆசனம் வன்னிப்பகுதிக்கு வழங்க வேண்டும்.

இது தொடர்பான கோரிக்கையை முன்வைப்பதற்காக கட்சியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்துக்கு நாமும், அந்த வேட்பாள ரும் அழைப்பை மேற்கொண்டிருந்தோம். தொடர்ச்சியாக முயற்சித்தும் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. இதனால் ஊடகங்கள் வாயிலாக அதனை தெரியப்படுத்துகின்றோம்- என்றார்.

# யானையை என்ன செய்வது? திங்களன்று அறிவிப்பு வரும்



கொழும்பு, ஒக. 08

2020 பொதுத்தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் ஏற்படுத்தப்படவிருக்கும் மாற்றங்கள் மற்றும் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், அவை குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்றும் கட்சியின் பதில் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மிகப்பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது.

நாட்டின் அனைத்துத் தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவியிருக்கும் நிலையில், தேசிய பட்டியலின் ஊடாக ஒரு ஆசனம் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவரது 42 வருட அரசியல் பயணத்தில் முதற்தடவையாக பாராளுமன்ற ஆசனத்தைத் தக்கவைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார். கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் 500,000 வாக்குகளைப் பெற்று அவரால் நிலைநாட்டப்பட்ட சாதனையும் இம்முறை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவர் ரவி கருணாநாயக்க கொழும்பிலும், பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் குருநாகலிலும் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்தகையதொரு பின்னணியில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் மத்திய செயற்குழு கூடி தற்போதைய நிலைவரம் தொடர்பில் ஆராய்ந்திருக்கிறது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் முக்கிய பதவிகளில் ஏற் படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள், கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும், அவை பற்றிய விவரங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் கட்சியின் பதில் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

# தந்தை, மகனாக இம்முறை சபைக்கு வரும் 3 சோடிகள்!

கொழும்பு, ஒக. 08

தந்தையும் மகனுமாக 3 சோடிகள் இம்முறை இடம் பெற்ற நடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

பொதுஜன பெரமுன சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் இம்முறை தேர்தலில் வென்று நாடாளுமன்றத்துக்குச் செல்கின்றனர்.

அத்துடன், சமல் ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் ஷஹேந்திர ஆகியோரும் வென்று நாடாளுமன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஜனக பண்டார தென்னக்கோன் அவரது மகன் பிரமித்த ஆகியோர் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ராஜித சேனாரத்ன அவரது மகன் சத்துர ஆகியோர் இந்தத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# நாடாளுமன்றத்தில் 8 பெண் பிரதிநிதிகள்

கொழும்பு, ஒக. 08

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கு எட்டுப் பெண் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து மட்டும் மூன்று பெண் பிரதிநிதிகள் இம்முறை தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

பவித்ரா வன்னியராச்சி மற்றும் முதித சொய்சா ஆகியோர் பொதுஜன பெரமுன சார்பில் மொட்டு சின்னத்தில் போட்டியிட்டு இரத்தினபுரி மாவட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட தலதா அத்துகோரள இரத்தினபுரியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் இருந்து பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட ராஜிகா விக்ரமசிங்க நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் கோகிலா குணவர்தன ஆகியோரும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

காலி மாவட்டத்தில் இருந்து பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட கீதா குமாரசிங்கவும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ரோஹினி கவிரத்ன வெற்றிபெற்றுள்ளார்.

இதேவேளை, அரசியல் கட்சிகள் சமர்ப்பித்துள்ள தேசியப் பட்டிலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவர்களிலிருந்து பெண்கள் தெரிவானால் நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் மேலும் அதிகரிக்கலாம்.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் பெண் பிரதிநிதித்துவம் இதுவரை 6.5 வீதத்தை தாண்டவில்லை.

2015-2020 நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் 5.3% ஆக இருந்தது. 225 உறுப்பினர்களில் 2015 இல் 12 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தங்காலைக்கு மக்கள் படையெடுப்பு

கொழும்பு, ஒக. 08

2020 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக அதிகளவான பொதுமக்கள் தங்காலை கால்டன் இல்லத்துக்கு சென்றுள்ளனர்.

அத்துடன், பிரதேசத்தில் உள்ள பௌத்த பிக்குகள் பிரதமர் மற்றும் நாமலுக்கு பிரித் நூல் அணிவித்துள்ளனர்.





செய்திகள்

# ரவிராஜ் சிலைக்கு கறுப்பு துணி மூடி நேற்று போராட்டம்

## விருப்பு வாக்கில் எழுந்த சர்ச்சைகளை அடுத்து



யாழ்ப்பாணம், ஓக. 08

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலையின் முகப் பகுதி கறுப்பு துணியால் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மாமனிதர் நடராஜா ரவிராஜின் பாரியார் சசிகலா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் மோசடி செய்யப்பட்டு திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார் எனச் சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து, சசிகலாவும் தான் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார் என்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே நேற்றுக் காலை சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மாமனிதர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலையின் முகப் பகுதி கறுப்புத் துணியினால் மூடப்பட்டுள்ளதுடன், கைகள் மற்றும் கால்கள் சிவப்பு மஞ்சள் துணியினால் கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் விசாரணைகளை நடத்தவேண்டும் எனத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவிடம் சசிகலா ரவிராஜ் முறையிட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புதிய பிரதமராக மஹிந்த ஞாயிறன்று பதவியேற்பு

கொழும்பு, ஓக. 08

இலங்கையின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பதவியேற்பார் என்று அறவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 146 ஆசனங்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் தகுதியைப் பெற்ற நிலையில் அதன் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றம் எதிர்வரும் 20ஆம் திகதி கூடவுள்ளது.

# புதியதொரு பலத்துடன் முன்னோக்கி செல்வோம்

## அகிலவிராஜ் நம்பிக்கை

கொழும்பு, ஓக. 08

இம்முறை பொதுத்தேர்தலில் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளையும் மீறிய அரசியல் செயற்பாடுகள் முன்னிலை பெற்றிருக்கின்றன. இது எதிர்காலத்தில் குழப்பகரமான அரசியல் நிலவரமொன்றைத் தோற்றுவிக்கலாம் என்று சுட்டிக்காட்டியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், தமது கட்சிக்குள் மறுசீரமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு மீண்டும் புதியதொரு பலத்துடன் முன்நோக்கிச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கும் நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

2020 பொதுத்தேர்தலை அமைதியான முறையில் வெற்றிகரமாக நடத்தி முடித்தமைக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் அரச சேவையாளர்கள், முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாம் அறிமுகப்படுத்திய அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாகவே இவ்வாறு நீதியானதும் அமைதியானதுமான முறையில் தேர்தலை நடத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தொற்றுநோய் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் அது எமது நாட்டின் பொருளாதாரத்தையும் சீர்குலைத்திருக்கிறது. அவ்வாறிருக்கையில் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் வலுப்படுத்துவதற்குமான செயற்திட்டத்தை இம்முறைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே முன்வைத்திருந்தது.

தற்போதைய சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவை வெளிப்படுத்தியிருக்கும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாரிய வெற்றியைப் பெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி அதன் ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு நீண்டகால நோக்கிலான பல்வேறு சேவைகளைச் செய்தும் தோல்விகண்டிருக்கிறது.

கட்சி என்ற அடிப்படையில் உள்ளக மற்றும் வெளியக ரீதியாக ஏற்பட்ட சவால்களுக்கு முகங்கொடுத்தோம். எம்முடைய மற்றும் ஏனையோரின் தோல்விகளுக்கும் குறைபாடுகளுக்கும் பொறுப்பேற்றுக்கொள்கின்றோம்.

இம்முறைத்தேர்தலில் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளையும் மீறிச்செல்லும் அளவிற்கு அரசியல் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இதன் காரணமாக எதிர்காலத்தில் நாட்டில் சீர்குலைந்த அரசியல் நிலையொன்று ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் மறுசீரமைக்கப்பட்டு புதியதொரு பலத்துடன் முன்நோக்கிச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றுள்ளது.

# கனவு நனவாகியது! கோட்டாபய மகிழ்ச்சி



கொழும்பு, ஓக. 08

பொதுத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றுள்ளது என ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தனது டுவிட்டர் தளத்தில் இதனை பதிவு செய்துள்ளார்.

சுபீட்சமான வாழ்வை பலப்படுத்துவதற்கு தேவையான பாராளுமன்றத்தை அமைப்பதற்கான எதிர்பார்ப்பை இன்று நிறைவேற்ற முடிந்ததாக ஜனாதிபதி தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

# சிறிகொத்தவுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 08

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் முடிவைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிறிகொத்தவுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிகொத்தாவில் இருக்கும்போது மாத்திரமே சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் யாரும் நேற்று முன்தினம் மாலை வரை சிறிகொத்தவுக்கு விஜயம் செய்யவில்லை. அதேபோன்று பெரும்பாலான பணியாளர்களும் கடமைக்கு வருகை தரவில்லை என சிறிகொத்தவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

# வரலாற்று சாதனை படைத்தார் மஹிந்த!

## 5 லட்சத்துக்கு மேல் விருப்பு வாக்கு



கொழும்பு, ஓக. 08

இலங்கை தேர்தல் வரலாற்றில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் என்ற சாதனையை மஹிந்த ராஜபக்ஷ படைத்துள்ளார். குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட அவர் 5 லட்சத்து 27 ஆயிரத்து 364 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத் தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 5 லட்சத்து 566 விருப்பு வாக்குகளைப் பெற்றார். பொதுத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகளாக இது பதிவானது.

அதற்கு முன்னர் 1994 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகா அம்மையார் கம்பஹா மாவட்டத்தில் 4 லட்சத்து 64 ஆயிரத்து 588 வாக்குகளைப் பெற்றிருந்தார். இந்நிலையிலேயே இந்த சாதனையை மஹிந்த இம்முறை முறியடித்துள்ளார்.

# கொழும்பில் முதலிடத்தை பறிகொடுத்தார் வீரவன்ஸ



கொழும்பு, ஓக. 08

கொழும்பு மாவட்டத்தில் 12 ஆசனங்களைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. அத்து டன், தமிழ் முற்போக்குக் கூட் டணியின் தலைவர் மனோ கணேசனும் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் மஹிந்த அணியின் சார்பில் விமல் வீரவன்ஸவே விருப்பு வாக்குப் பட்டியலில் முதலிடம் பிடிப்பார். ஆனால், இம்மறை சரத் வீரசேகர அந்த இடத்தைப் பெற்றுள்ளார்.

சரத் வீரசேகரவுக்கு கொழும் பில் 328,092 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளன. விமல் வீர வன்ஸவுக்கு 267,084 விருப்பு வாக்குகள் கிடைத்தன.

ஈழநாடு
Eelanadu

## பதுளை

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

நிமால் சிறிபால டி சில்வா - 1,41,901
சுதர்ஷன தெனிபிட்டிய - 71,766
தேனுக விதானகமகே - 68,338
சாமர சம்பத் தஸநாயக்க - 66,393
டிலான் பெரேரா - 53,081
திஸ்ஸ குட்டியாராச்சி - 50,151

### ஐக்கிய மக்கள் சக்தி

வடிவேல் சுரேஸ் - 49,762
அரவிந்தகுமார் - 45,491
சமிந்த விஜேசிறி - 36,291

## காலி

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

ரமேஷ் பத்திரண - 205,814
சம்பத் அத்துகோரள - 128,331
மொஹன் சில்வா - 111,626
சந்திம் வீரக்கொடி - 84,984
இசுறு தொடங்கொட - 71,266
ஷான் விஜயலால் த சில்வா - 67,793
கீதா குமாரசிங்க - 63,357

### ஐக்கிய மக்கள் சக்தி

கயந்த கருணாதிலக - 50,097
மனுஷ நாணயக்கார - 47,399

## பொலநறுவை

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

மைத்திரிபால சிறிசேன - 111,137
ரொஷான் ரணசிங்க - 90,615
சிறிபால கம்லத் - 67,917
அமரகீர்த்தி அதுகோரள - 45,939

### ஐக்கிய மக்கள் சக்தி

கிங்ஸ் நெல்சன் - 22,392

## அநுராதபுரம்

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

எஸ்.எம் சந்திரசேன - 139,368
சன்ன ஜயசுமன - 133,980
உத்திக பிரேமரத்ன - 133,550
செஹான் சேமசிங்க - 119,878
துமிந்த திஸநாயக்க - 75,535
எச். நந்தசேன - 53,618
எஸ். குமாரசிறி - 49,030

### ஐக்கிய மக்கள் சக்தி

இசாக் ரஹ்மான் - 49,290
ரோஹண பண்டார - 39,520

## குருநாகல்

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

மஹிந்த ராஜபக்ஷ - 527,364
ஜோன்ஸ்டன் பெரேரா - 199,203
குணபால ரத்னசேகர - 141,991
தயாசிறி ஜயசேகர - 112,452
அசங்க நவரத்ன - 82,779
சமன்பிரிய ஹேரத் - 66,814
டீ.பி.ஹேரத் - 61,954
அநுர பிரியதர்ஷன யாப்பா - 59,696
பியரத்ன ஹேரத் - 54,351
ஷாந்த பண்டார - 52,086
சுமித் உடுகும்புர - 51,134

### ஐக்கிய மக்கள் சக்தி

நளின் பண்டார - 75,631
ஜே.சி. அலவதுவல - 65,956
அசோக் அபேசிங்க - 54,512
துஷார இந்துனில் - 49,364

## மாத்தறை

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

நிபுண ரணவக்க - 131,010
கருணாதாஸ கொடிதுவக்கு - 114,319
டலஸ் அழகப்பெரும - 103,534
காஞ்சன விஜேசேகர - 96,033
மஹிந்த யாப்ப அபேவர்தன - 80,595
வீரசுமண வீரசிங்க - 77,968

### ஐக்கிய மக்கள் சக்தி

புத்திக பத்திரண - 44,839

# பாராளுமன்றுக்கு தெரிவானவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் விவரம்

## யாழ்ப்பாணம்

### இலங்கை தமிழ் அரசு கட்சி

சிவஞானம் சிறிதரன் - 35,884
எம்.ஏ.சுமந்திரன் - 27,834
தர்மலிங்கம் சித்தார்த்தன் - 23,840

### அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - 31,658

### ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி

அங்கஜன் இராமநாதன் - 36,365

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

டக்ளஸ் தேவனந்தா - 32,146

### தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

சி.வி விக்னேஸ்வரன் - 21,554

## வன்னி

### இலங்கை தமிழ் அரசுக் கட்சி

சார்ள்ஸ் நிர்மலநாதன் - 25,668
செல்வம் அடைகலநாதன் - 18,563
வினோநோதராகலிங்கம் - 15,190

### ஐக்கிய மக்கள் சக்தி

ரிஷாத் பதியுதீன் - 28,203

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

காதர் மஸ்தான் - 13,454

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

குலசிங்கம் திலீபன் - 3,203

## திருகோணமலை

### இலங்கை தமிழ் அரசுக் கட்சி

இரா. சம்பந்தன் - 21, 422

### ஐக்கிய மக்கள் சக்தி

எஸ்.எம் தௌபீக் - 43, 759
இம்ரான் மஹ்ரூப் - 39,029

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

கபில நுவன் அத்துகோரள - 30, 056

## மட்டக்களப்பு

### இலங்கை தமிழ் அரசுக் கட்சி

இரா. சாணக்கியன் - 33,332
கோவிந்தன் கருணாகரன் - 26, 382

### தமிழ் மக்கள் விடுதலை புலிகள்

சிவனேசதுரை சந்திரகாந்தன் - 54,198

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

சதாசிவம் வியாழேந்திரன் - 22,218

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

அஹமட் செய்னுலாப்தீன் நசீர் - 17,599

## திகாமடுல்ல (அம்பாறை)

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

விமலவீர திஸநாயக்க - 63,594
டீ.சி வீரசிங்க - 56, 006
திலக் ராஜபக்ஷ - 54, 203

### ஐக்கிய மக்கள் சக்தி

எம்.எச்.எம் ஹரீஸ் - 36,850
பைஸல் காசிம் - 29,423

### தேசிய காங்கிரஸ்

ஏ.எச்.எம் அதாவுல்ல - 35,697

### அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

மொஹமட் முஷாரப் - 18,389

## கண்டி

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

திலும் அமுனுகம - 171,758
மஹிந்தானந்த அளுத்கமகே - 161,471
லொஹன் ரத்வத்த - 140,917
அநுராத ஜெயரத்ன - 140,798
கெஹலிய ரம்புக்வெல - 110,832
வசந்த யாப்பா பண்டார - 108,940
குணதிலக ராஜபக்ஷ - 49,317
உதயன சாமிந்த - 39,904

### ஐக்கிய மக்கள் சக்தி

ரவூப் ஹக்கீம் - 83,398
அப்துல் ஹலீம் - 71,063
எம். வேலுகுமார் - 57,445
லக்ஷமன் கிரியெல்ல - 52,311

## நுவரெலியா

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

ஜீவன் தொண்டமான் - 109,155
சீ.பீ ரத்நாயக்க - 70,871
எஸ்.பீ திஸநாயக்க - 66,045
மருதபாண்டி ரமேஸ்வரன் - 57,902
நிமல் பியதிஸ்ஸ - 51,225

### ஐக்கிய மக்கள் சக்தி

பழனி திகாம்பரம் - 83,392
வேலுசாமி இராதாகிருஸ்ணன் - 72,167
மயில்வாகனம் உதயகுமார் - 68,119

## அம்பாந்தோட்டை

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

நாமல் ராஜபக்ஷ - 166,660
டி.வி ஷானக்க - 128,805
மஹிந்த அமரவீர - 123,730
சமல் ராஜபக்ஷ - 85,330
உபுல் கலப்பத்தி - 63,369
அஜித் ராஜபக்ஷ - 47,375

### ஐக்கிய மக்கள் சக்தி

திலிப் வெதாராச்சி - 25,376

## கொழும்பு

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

சரத் வீரசேகர - 328,092
விமல் வீரவன்ஸ - 267,084
உதய கம்மன்பில - 136,331
விஜேதாஸ ராஜபக்ஷ - 120,626
பந்துல குணவர்த்தன - 101,644
பிரதீப் சமன் குமார - 91,958
தினேஸ் சந்திர ரூபசிங்க - 85,287
மதுர விதானகெ - 70,205
பிரேமனாத் சீ தொலவத்த - 69,055
காமினி குலவன்ஸ லொகுகே - 62,543
சுசில் பிரேமஜயந்த - 50,321
ஜகத் குமார - 47,693

### ஐக்கிய மக்கள் சக்தி

சஜித் பிரேமதாஸ - 305,744
எஸ்.எம் மரிக்கார் - 96,916
முஜிபுர் ரஹ்மான் - 87,589
ஹர்ஷ த சில்வா - 82,845
சம்பிக்க ரணவக்க - 65,574
மனோ கணேசன் - 62,091

### தேசிய மக்கள் சக்தி

அநுரகுமார திஸநாயக்கா - 49, 814

## கம்பஹா

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

நாலக கொடஹேவா - 325,479
பிரசன்ன ரணதுங்க - 316,544
இந்திக்க அனுருத்த - 136,297
சிசிர ஜெயகொடி - 113,130
நிமல் லன்சா - 108,945
பிரதீப் வித்தான - 97,494
சுதர்ஷனி பெர்னாண்டோ - 89,329
பிரசன்ன ரணவீர - 83,203
ஹர்ஷனி குணவர்த்தன - 77,922
லசந்த அலகியவன்ன - 73,061
நலின் பெர்னாண்டோ - 69,800
மிலான் ஜயதிலக்க - 68,449
உபுல் மஹேந்திர - 67,756

### ஐக்கிய மக்கள் சக்தி

சரத் பொன்சேகா - 110,555
ரஞ்சன் ராமநாயக்க - 103,992
ஹர்ஷன ராஜகருணா - 73,612
காவிந்த ஜயவர்தன - 52,026

### தேசிய மக்கள் சக்தி

விஜித ஹேரத் - 37,008

# இன்றைய தொலைக்காட்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : பீட் பொக்ஸ்
11.00 மணி : மைதானம்

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
விஜய்காந்த், பிரபுதேவா, மீனா மற்றும் பலர் நடிப்பில்
வானத்தைப்போல
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை?

**இரவு**

7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
ஸ்ரீதேவிநடிப்பில்
இங்கிலிஷ் விங்கிலிஷ்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN Vision

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**

12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

## ஓம் டிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நல்லூர் கந்தன் 14ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு



10.00 மணி : நல்லூர் கந்தன் 15 ஆம் நாள் காலைத் திருவிழா நேரலை
11.30 மணி : பக்திமலர்

**பகல்**

12.30 மணி : திருவிழா
4.30 மணி : நல்லூர் கந்தன் 15ஆம் நாள் மாலைத் திருவிழா நேரலை

**இரவு**

7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : நல்லூர் கந்தன் 15ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி - ஜெபமாலை

**பகல்**

12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.00 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : தர்ஜீமத்துல் குர்ஆன்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இறை தென்றல்
8.00 மணி : குத்துபா பிரசங்கம்
8.30 மணி : அல் உழ்கிய்யா
9.30 மணி : ஹஜ் ஆவணப்படம்
10.00 மணி : சிறப்பு நேரலை வாழ்த்து நிகழ்ச்சி

**பகல்**

12.00 மணி : பிறை பிரசங்கம்
1.00 மணி : சிறப்பு திரைப்படம்
3.00 மணி : இசை மழை
4:00 மணி : குட்டீஸ் ஈத் கொண்டாட்டம்
5.00 மணி : கவிதாரங்கம்
6.00 மணி : பத்தாம் பிறை கலந்துரையாடல்

**இரவு**

7.00 மணி : யார் இவர்?
10.30 மணி : கலந்துரையாடல்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - கணிதம்




6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - தமிழ்
8.15 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) மறு ஒளிபரப்பு
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்




4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்

**இரவு**

7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : உயர்தரம் கணிதம் விஞ்ஞானப்பிரிவு

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.08.2020 அன்று வெளியிடப்பட்டது.